# கிளிநொச்சி மாவட்டத்தினை ஆவணப்படுத்தல்
# ஆண்டறிக்கை 2023

| | |
|---|---|
| செயற்றிட்டத் தலைப்பு | கிளிநொச்சி பிராந்திய ஆவணப்படுத்தல் |
| செயற்றிட்ட எண் | NF/GP/2020/0016 |
| செயற்றிட்ட இடம் | கிளிநொச்சி |
| செயற்றிட்டக் காலம் | ஜனவரி 2021 - செப்ரம்பர் 2022 |
| நிறைவேற்றும் அமைப்பு | நூலக நிறுவனம் |
| புரவலர் அமைப்பு | கிளி மக்கள் ஒன்றியம் |
| முக்கிய பங்குத்தாரர்கள் | எழுத்தாளர்கள், ஆவணச் சேகரிப்பாளர்கள், தன்னார்வலர்கள் |
| செயற்றிட்டச் செலவுகள் | 2020 - LKR 160,917.75<br>2021 - LKR 669,746.34<br>2022- LKR 596,154.00 |

இலங்கையின் வட மாகாணத்தில் அமைந்துள்ள ஐந்து மாவட்டங்களில் ஒன்றாக கிளிநொச்சி அமைகின்றது. இது தமிழ் பேசும் மக்களை பெரும்பான்மையாகக் கொண்ட ஒரு மாவட்டம். இந்த மாவட்டத்திலே இலங்கைத் தமிழர்கள் மட்டுமல்லாது முஸ்லிம்களும், மலையகத் தமிழர்களும் வாழ்கிறார்கள். கிளிநொச்சி மாவட்டத்தின் வரலாறு, குறிப்பாக அங்கு இடம்பெற்ற காணி விநியோகத்தின் மூலமாக இடம்பெற்ற குடியேற்ற முயற்சிகள், கிராமங்களின் உருவாக்கம், அங்கு வாழும் மக்களின் பாரம்பரியங்கள், பழக்கவழக்கங்கள், கலை கலாசாரக் கூறுகள், சமூகக் கட்டமைப்புக்கள், விவசாயம் மற்றும் இதர வாழ்வாதார முறைகள், பன்மைத்துவம், சமூக நிறுவனங்கள், பாடசாலைகள், வழிபாட்டுத்தலங்கள், பெண்கள் அமைப்புகள், சனசமூக நிலையங்கள், அந்த மாவட்டத்திலே இடம்பெற்ற பொருளாதார மாற்றங்கள், அபிவிருத்தி முயற்சிகள், சுற்றுச் சூழல் பாதுகாப்பு முறைகள் போன்றன பற்றியும், போர்க் காலத்தில் கிளிநொச்சி மாவட்டம் சந்தித்த பிரச்சினைகள், விடுதலைப் புலிகளின் ஆளுகையின் போது அந்த மாவட்டம் நிர்வாக ரீதியாகப் பெற்றிருந்த முக்கியத்துவம் போன்ற விடயங்களையும், போருக்குப் பிந்திய காலத்தில் இடம்பெற்ற இராணுவமயமாக்கல், அபிவிருத்தி போன்றவற்றினை ஆவணப்படுத்தும் நோக்கிலே இந்தச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான எழுத்து மூலமாக மற்றும் அச்சு, பல்லூடக், இலத்திரனியல் சார்ந்ததாக காணப்படும் வளங்களைப் பாதுகாத்தல், ஆவணப்படுத்தல், அடிப்படையில் கிளிநொச்சி பிராந்தியத்தில் காணப்படுகின்ற அவர்களது சமூக, அரசியல், பொருளாதாரம் மற்றும் பண்பாடு சார்ந்த விடயங்களை ஆவணப்படுத்தலுக்கான ஓர் செயற்பாடாக கிளிநொச்சி மாவட்டத்தினை ஆவணப்படுத்தல் - கட்டம் 1 ஆரம்பமானது. அதற்கான செயற்பாடுகள் டிசம்பர் 2020 மூன்றாம் வாரத்தில் இல் ஆரம்பிக்கப்பட்டது. ஜனவரி 2021 முதல் செப்டம்பர் 2021 வரையான காலப்பகுதி வரை இடம்பெற்றது. இதன் அடுத்த 2 ஆம் கட்டமானது ஜனவரி 2022 முதல் டிசம்பர் 2022 வரையான காலப்பகுதி வரை இடம்பெற்றது.

இலக்குகளும் நோக்கங்களும்

கிளிநொச்சி மாவட்டத்தினதும் அங்கு வாழும் மக்களினது வரலாற்றினையும் ஆவணப்படுத்தும் இந்த முயற்சியானது அதனுடைய கால மற்றும் இட ரீதியில் பரந்துபட்டது. இந்த முயற்சியினை ஒரு செயற்றிட்டத்தின் மூலமாக நிறைவுசெய்ய முடியாது. இந்த முதலாவது செயற்றிட்டம் கிளிநொச்சி மாவட்டத்தினைச் சேர்ந்த பின்வரும் கிராமங்களையும், அங்கு வாழ்ந்த மற்றும் தற்போது வாழுகின்ற மக்களினை ஆவணப்படுத்துவதனை பிரதான நோக்காகக் கொண்டுள்ளது:

- இலங்கையில் தமிழ் பேசும் சமூகங்களின் வரலாற்றின் உருவாக்கத்திலே கிளிநொச்சி மாவட்டம் மற்றும் அங்கு வாழும் மக்கள் கொண்டிருக்கும் வகிபங்கினை வெளிக்கொண்டு வருதல்.

- கிளிநொச்சி மாவட்டத்தில் காணப்படும் பன்மைத்துவம், அசமத்துவங்கள், அதிகார மையங்கள், மக்களின் எதிர்ப்பு முயற்சிகள் என்பவற்றை ஆவணங்கள் வாயிலாக வெளிப்படுத்தல்.

- கிளிநொச்சி பற்றிய ஆய்வுகளில் ஈடுபடுவோருக்கு இச்செயற்றிட்டம் மூலம் ஆர்வத்தினை வழங்குதலும், அவர்கள் தமக்கு வேண்டிய பிரதான ஆதாரங்களை இலகுவில் பெறக்கூடிய ஒரு அமைப்பினை இணையவெளியில் உருவாக்குதலும் முக்கிய இலக்காக அமைகிறது.

**2021-** அடைவுகள்

ஒக்ரோபர், நவம்பர், டிசம்பர் ஆகிய மூன்று மாதங்களும் இச் செயற்றிட்டமானது ஊழியர்கள் இல்லாத காரணத்தால் இடைநிறுத்தப்பட்டிருந்தது.

| | பெறப்பட்ட ஆவணங்கள் | பக்கங்கள் | வாய்மொழி வரலாறுகள் | புகைப்படங்கள் | ஆளுமை | நிறுவனங்கள் |
|---|---|---|---|---|---|---|
| ஜனவரி | 6 | 1,220 | 0 | - | - | - |
| பெப்ரவரி | 6 | 1,116 | 0 | - | - | - |
| மார்ச் | 8 | 304 | 6 | - | - | - |
| ஏப்ரல் | 17 | 2,708 | 3 | - | 6 | - |
| மே | 34 | 4,102 | 7 | 13 | - | - |
| யூன் | 41 | 4,234 | 6 | 7 | - | - |
| யூலை | 43 | 3,418 | 2 | 2 | 1 | 2 |
| ஆகஸ்ட் | 25 | 2,846 | 2 | 7 | 1 | 1 |
| செப்டம்பர் | 3 | 648 | - | - | - | - |
| ஒக்ரோபர் | - | - | - | 2 | - | - |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| நவம்பர் | - | - | - | - | - | - |
| டிசம்பர் | - | - | - | - | - | - |
| மொத்தம் | **183** | **20,596** | **26** | **31** | **8** | **3** |

**2022 -** அடைவுகள்

| | பெறப்பட்ட ஆவணங்கள் | பக்கங்கள் | வாய்மொழி வரலாறுகள் | புகைப்படங்கள் | ஆளுமை | நிறுவனங்கள் |
|---|---|---|---|---|---|---|
| ஜனவரி | 90 | 9,076 | - | 23 | 1 | - |
| பெப்ரவரி | 64 | 4,936 | 4 | - | - | - |
| மார்ச் | 76 | 3,688 | 2 | 120 | 6 | 1 |
| ஏப்ரல் | 40 | 3,400 | 2 | 62 | 1 | 1 |
| மே | - | 340 | 1 | 55 | 14 | 0 |
| யூன் | 0 | 0 | 0 | 40 | 40 | 0 |
| யூலை | - | - | - | - | 31 | - |
| ஆகஸ்ட் | - | - | - | - | 19 | - |
| செப்டம்பர் | - | - | - | - | 31 | - |
| ஒக்ரோபர் | - | - | - | - | - | - |
| நவம்பர் | - | - | - | - | - | - |
| டிசம்பர் | - | - | - | - | - | - |
| மொத்தம் | **270** | **21,440** | **9** | **300** | **143** | **2** |

**2023 -** அடைவுகள்

| | பெறப்பட்ட ஆவணங்கள் | பக்கங் கள் | வாய்மொழி வரலாறுகள் | புகைப்ப டங்கள் | ஆளு மை | நிறுவனங் கள் |
|---|---|---|---|---|---|---|
| ஜனவரி | 14 | 528 | 3 | 10 | 1 | 1 |
| பெப்ரவரி | 19 | 1,848 | 7 | 7 | 5 | 4 |
| மார்ச் | 42 | 2,600 | 4 | 4 | 0 | 1 |
| ஏப்ரல் | 11 | 610 | 5 | 2 | 4 | 4 |
| மே | 47 | 954 | 5 | 19 | 8 | 2 |
| யூன் | 46 | 2,148 | 3 | 31 | 3 | 8 |
| யூலை | 8 | 1,158 | 2 | 8 | 1 | 7 |
| ஆகஸ்ட் | 13 | 548 | 1 | 16 | 2 | 5 |
| செப்டம்பர் | 7 | 962 | 4 | 15 | 8 | 2 |
| ஒக்ரோபர் | 3 | 512 | 2 | 18 | 4 | 2 |
| நவம்பர் | 5 | 300 | 1 | 2 | 0 | 0 |
| டிசம்பர் | 0 | 0 | 1 | 0 | 0 | 0 |
| மொத்தம் | **215** | **12,168** | **38** | **132** | **36** | **36** |

எதிர்கொண்ட சவால்கள்

- கிளிநொச்சி மாவட்டமானது 2009 ஆம் ஆண்டு முழுமையான இடப் பெயர்வை சந்தித்த காரணத்தால் ஆவணங்களை அடையாளம் காண்பதில் மிக பெரிய சவால் காணப்பட்டது. பெரும்பாலான ஆவணங்கள் இடப்பெயர்வு சந்தர்ப்பத்தில் இழக்கப்பட்டும் இடம்மாற்றப்பட்டும் காணப்படுவதால் அவற்றை அடையாளம் காண்பதற்கான சரியான பொறிமுறையை பயன்படுத்த வேண்டிய அவசியம் உள்ளது.
- கிளிநொச்சியை சேர்ந்த ஆளுமைகளும், பிரபலங்களும் புலம் பெயர்ந்த காரணத்தால் அவர்களை அணுகுவதில் உள்ள சவால்கள்.
- புதிய தலைமுறை எழுத்தாளர்கள் தமது ஆக்கங்கள் மற்றும் படைப்புக்களை எண்ணிமப்படுத்துவதில் காட்டும் தயக்கம்.

கற்றல்களும் பரிந்துரைகளும்

- இச் செயற்றிட்டமானது போரால் முழுமையாக பாதிக்கப்பட்ட மாவட்டத்தில் இடம்பெறுவதால் அதனை சரியான முறையில் கொண்டு செல்வதற்கான நிபுணத்துவம் வாய்ந்தவர்களின் உதவியையும் வழிக்காட்டலையும் பெறல்.
- தொடர்புகள் மூலமாகவும் வலையமைப்பை உருவாக்கி தொடர்புகளை ஏற்படுத்துவதன் மூலமாகவும் கிளிநொச்சி மாவட்ட ஆவணங்கள், சேகரிப்புகள் மற்றும் ஆளுமைகள் தொடர்பான முழுமையான தரவுப்பட்டியல் ஒன்றை தயார் செய்தல்.

- ஏனைய புலம் பெயர் எழுத்தாளர்கள் மற்றும் இலக்கிய பிரபலங்களூடாக கிளிநொச்சியை சேர்ந்த புலம் பெயர் ஆளுமைகள் மற்றும் எழுத்தாளர்களை இனங்காணுதல்.

**பின்னிணைப்புக்கள்**
[கிளிநொச்சி ஆவணகம்]